Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

பக்கங்கள் 12

சுடர் : 38
கதிர் : 30

திங்கட்கிழமை 26 டிசெம்பர் 2022

மார்கழி 11 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2053

## மீனவர்கள் இருவரை காணோம்

மன்னார், டிசெ. 26
மன்னார் கடலில் மீன்பிடிக்கச் சென்ற இரு மீனவர்களைக் காணவில்லை என்று மாவட்ட கடற்றொழில் திணைக்களத் துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
மன்னார், சிலாவத்துறையிலிருந்து நேற்றுமுன்தினம் »11

## ஆழிப்பேரலை தாண்டவமாடி 18ஆண்டுகள் இன்று நிறைவு

### கடல்வளங்களை சூறையாடுவதை நிறுத்துவதே உண்மையான அஞ்சலி

யாழ்ப்பாணம், டிசெ. 26
இலங்கையைக் கடற்கோள் சுனாமிப் பேரலை தாக்கியபோது கரையோரச் சூழற்தொகுதிகள் அழிக்கப்பட்ட இடங்களில் உயிர்ப்பலி யெடுப்பு உச்சத்தைத் தொட்டது.
இதன்மூலம் கடற்கோள் 'இயற்கையை நீ அழித்தால் இயற்கையால் நீ அழிவாய்' என்ற வலுவான பாடத்தை எமக்குப் போதித்தது. ஆனால், நாம் பட்டும் திருந்தாத பாவிகளாகவே இன்னமும் »11

## பக்தர்களின் காணிக்கைகளில் துப்பாக்கித் தோட்டாக்கள்

### நத்தார் ஆராதனையில் சம்பவம்

கொழும்பு, டிசெ. 26
புத்தளம், மாதம்பை புனித செபஸ்தியார் தேவாலயத்தில் நத்தார் வழிபாட்டின்போது பக்தர்கள் வழங்கிய காணிக்கைகளைப் பரிசோதித்தபோது, சிறிய கறுப்புப் பெட்டியொன்றில், »11

## புலிகளுக்கு புத்துயிரளிக்கிறதாம் பாகிஸ்தான் புலனாய்வுச்சேவை

### இந்திய ஊடகத்தின் கண்டுபிடிப்பு

கொழும்பு, டிசெ. 26
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை தமிழ்நாட்டில் தற்போது புதுப்பிக்க பாகிஸ்தான் புலனாய்வுச் சேவை முயற்சிப்பதாக இந்திய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. »11

# தமிழ்த் தேசியக் கட்சிகளின் முயற்சி வரவேற்கக்கூடியதே!

### கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், டிசெம்பர் 26**

**தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் யாழ்ப்பாணத்தில் ஒன்றுகூடி கதைத்தமை வரவேற்கத்தக்க விடயம், இது மகிழ்ச்சியான செய்தி. உள்ளூராட்சித் தேர்தலில் ஒன்றாகக் களமிறங்குவது தொடர்பில் நாம் அனைவருடனும் கலந்துரையாடி இறுதி முடிவெடுப்போம். இதனைவிட மேலதிகமாக எதையும் கூறி இந்த முயற்சியை நான் குழப்ப விரும்பவில்லை.** »11

## யாழ். மாவட்டச் செயலர் மகேசனுக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், டிசெ. 26
யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் இடமாற்றம் பெற்றுச் செல்லவுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. »11

## யாழ்ப்பாணத்தில் பரவுகிறது புதியவகை போதைமாத்திரை

### பாதுகாப்புத் தரப்பினரே வழிகாட்டி என்று மருத்துவத் தரப்புக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 26
யாழ்ப்பாணத்தில் மருத்துவத்தேவைக்காகப் பயன்படுத்தப்படும் மருந்துகளை உயிர்கொல்லி போதைப்பொருளாகப் பயன்படுத்தும் கலாசாரம் வேரூன்றி வருவதாகத் »11

# வெள்ளத்தில் மூழ்கியது மலையகம்



- ★ 2 பேர் உயிரிழப்பு
- ★ பல கோடி ரூபா சொத்திழப்பு
- ★ 62 வீடுகள் சேதம்
- ★ 4 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை
- ★ ரயில் சேவைகள் நிறுத்தம்

கொழும்பு, டிசெ. 26
திருகோணமலை ஊடாக நிலப்பரப்புக்குள் நேற்று ஊடுருவிய தாழ்வு மண்டலத்தால் மலையகத்தில் கொட்டித்தீர்த்த கனமழையால் பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. கண்டி, இரத்தினபுரி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் அதிக ளவான சேதங்கள் இடம்பெற்றுள்ளன என்று இடர்முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. சுமார் 6 மணி நேரம் கனமழை நீடித்தமையால் கண்டி மாவட்டத்தின் பல பகுதிகளும் வெள்ளத்தில் முழுமையாக மூழ்கின. வர்த்தக நிலையங்களின் வெருங்கள் »11

## 7ஆம் திகதி வரை பலாலி – சென்னை ஆசனங்கள் முற்பதிவு

யாழ்., டிசெ. 26
பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திலிருந்து சென்னைக்கான விமான சேவைகள் முன்னர் அறிவிக்கப்பட்டதைப்போன்று தொடர்ச்சி »12

## வடக்கில் ஓரளவு மழைக்கு வாய்ப்பு

### இன்றுடன் காலநிலை சீரடையும்

யாழ்ப்பாணம், டிசெ. 26
வடக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களில் இன்று மிதியம் குறிப்பிடத்தக்களவு மழை வீழ்ச்சி »11

## கணவனை கத்திமுனையில் அச்சுறுத்தி மனைவி மீது வன்புணர்வு முயற்சி

### சந்தேகநபர்கள் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 26
யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியொன்றில் கணவனை கத்தி முனையில் அச்சுறுத்தி மனைவியை வன்புணர்வுக்கு உட்படுத்த முயற்சித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.
4 நாள்களுக்கு முன்னர் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.
கணவன், மனைவி, குழந்தை »12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு வயல்களில் எரிபந்தம் நோய் கண்டறிவு

## உடனடி நடவடிக்கைகள் ஆரம்பம்

முல்லைத்தீவு, டிசெ. 26

முல்லைத்தீவு மாவட்ட நெல்வயல்களில் எரிபந்தம் நோய் அடையாளம் காணப்பட்டுள்ளது என முல்லைத்தீவு மாவட்ட விவசாயப் பணிப்பாளர் யாமினி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நெல்லில் ஏற்படும் நோய்களில் எரிபந்தம் மிகவும் கூடிய பாதிப்பை ஏற்படுத்தும் ஒரு நோயாகும். முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியிலேயே குறித்த நோய் அடையாளம் காணப்பட்டுள்ளது.

நெற் தாவரத்தின் எந்தவொரு வளர்ச்சிப் பருவத்திலும் தொற்றக் கூடிய இந்தப் பங்கசு, இலையின் மேற்பரப்புத் தண்டின் கணுக்கள் அல்லது கதிர்கள் நெல் மணிகளின் மீது கறைகளை உருவாக்கும். எரிபந்தம் பங்கசுத் தண்டின் கணுக்களில் தொற்றும்போது அவ்விடம் கறுப்பு நிறமாக மாறி தண்டு அவ்விடத்தில் முறிந்து விழும். இதனால் பயிர்கள் அழிவதுடன் விளைச்சலிலும் அது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

எனவே, இதுகுறித்து உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதுடன் விவசாயிகளுக்கு ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளன - என்றார். (ச-125)

# மின்கட்டணம் உயர்ந்தால் ஹோட்டல்கள் மூடப்படும்

## உணவக உரிமையாளர்கள் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 26

மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டால் நாடு முழுவதுமுள்ள உணவகங்கள் மூடப்படும் என்று அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.


எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் அகில இலங்கை உணவக உரிமையாளர் சங்கத் தலைவர் அசேல சம்பத் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டால் இலங்கை வரலாற்றில் முதன்முறையாக ஹோட்டல்கள் மூடப்படும். அதேநேரம், முட்டையின் விலைப் பிரச்சினையைத் தீர்க்காவிட்டால் பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்துடன் இணைந்து பேக்கரிகளும் மூடப்படும் - என்றார். (எ-இ)

# ஜனாதிபதித் தேர்தலுக்கு திட்டம் வகுக்கும் ஐ.தே.க.

## பஸிலுடன் பேச்சு



கொழும்பு, டிசெ.26

உள்ளூராட்சி சபைத் தேர்தலை அப்படியே ஒத்திவைத்துவிட்டு உடனடியாக ஜனாதிபதித் தேர்தல் ஒன்றுக்குச் செல்வது பற்றி மந்திர ஆலோசனை ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச ஆகிய மூவரும் ஒன்றிணைந்தே இது பற்றி ஆலோசனை நடத்தியுள்ளனர்.

இந்தச் சந்திப்பில் வேறு எவரும் கலந்துகொள்ளவில்லை. மூடிய அறைக்குள்ளேயே ஆலோசனை இடம்பெற்றுள்ளது.

இந்த ஆலோசனையை முதலில் சமர்ப்பித்தவர் வஜிர அபேவர்த்தன. அப்படி உடனடியாக ஜனாதிபதித் தேர்தலை நடத்தினால் அதை எவ்வாறு வெற்றிகொள்வது என்ற வழிகள் சிலவற்றையும் அவர் பஸிலிடம் விளக்கிக் கூறியுள்ளார்.

நான்கு வருடங்கள் நிறைவில் ஜனாதிபதி விரும்பினால் ஜனாதிபதித் தேர்தலை நடத்தலாம். அவசரம் ஏற்பட்டால் அடுத்த வருடம் நடுப்பகுதியில் தேர்தலை நடத்தலாம். இதை வைத்துக்கொண்டு வேறு எந்தத் தேர்தலையும் நடத்தாது அடுத்த வருடம் நடுப் பகுதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவோம் என்று வஜிர அங்கு கூறினார்.

அவ்வாறு நடத்தினால் வடக்கு - கிழக்கு தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளும் மலையகத் தமிழர்களின் வாக்குகளும் ரணிலுக்குக் கிடைக்கும் என்று வஜிர சுட்டிக்காட்டினார்.

தமிழர்களுக்கு அரசியல் தீர்வை வழங்குவதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் தமிழர்கள் நிச்சயம் ரணிலுக்கே வாக்களிப்பர் என்றும், முஸ்லிம்களும் அவ்வாறே செய்வர் என்றும் வஜிர குறிப்பிட்டார்.

'மொட்டு'க் கட்சியின் கைகளில் இருக்கும் சிங்கள வாக்குகளை ரணிலுக்குப் பெற்றுத் தருவதற்கு நீங்கள் உரிய நடவடிக்கை எடுத்தால் எந்தவித சிக்கலும் இன்றி இலகுவாக ரணிலால் வெல்ல முடியும் என்றும் வஜிர மேலும் தெரிவித்தார். (எ-22)

# குடாநாட்டுக்கு விவசாயிகளுக்கு கூடுதலான ம.எண்ணெய் வேண்டும்

யாழ்ப்பாணம், டிசெ.26

அடுத்தவருடம் யாழ். மாவட்டத்துக்கு விவசாயத்துக்கான மண்ணெண்ணெயின் தேவை இரட்டிப்பாகும் என யாழ். மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திருமதி கைலேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

யாழ். குடாநாட்டு விவசாய நடவடிக்கைகளுக்காக இரு வாரத்துக்கு ஒரு தடவை 25 தாங்கி மண்ணெண்ணெய் தேவையென யாழ். மாவட்டச் செயலகத்தினூடாக பரிந்துரை செய்துள்ளோம்.

தற்போது மழைகாலம் என்பதால் விவசாயிகளுக்கான மண்ணெண்ணெய்த் தேவை சற்றுக் குறைவாகக் காணப்படுகின்றது. எதிர்வரும் ஜனவரி முதல் தொடருகின்ற கோடை காலத்தில் எமக்குரிய தாங்கிகளின் தேவை 50ஆக இருக்கும். தற்போது யாழ். மாவட்டத்துக்கான மண்ணெண்ணெய் விநியோகம் விவாசாயிகளுக்கு சீராக இடம்பெறுகிறது - என்றார். (ச-125)

# மின்கட்டண உயர்வு விடயத்தில் உணர்வுபூர்வமாகச் செயற்படுக!

## அரசிடம் கோருகிறார் டலஸ் எம்.பி.

கொழும்பு, டிசெ. 26

நாட்டு மக்கள் பொருளாதார ரீதியில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மின்கட்டணத்தை மீண்டும் அதிகரித்தால் நாட்டு மக்களுக்கு கடவுள் துணை என பிரார்த்தனை செய்வதைத்தவிர வேறு வழியில்லை. மின்கட்டண திருத்தம் தொடர்பான விடயத்தில் அரசாங்கம் உணர்வுபூர்வமாகச் செயற்படவேண்டும் - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

நாவல பகுதியிலுள்ள சுதந்திர மக்கள் காங்கிரஸ் காரியாலயத்தில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடு வங்குரோத்து நிலை அடைந்துள்ளமைக்கு பல்வேறு காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன. பொருளாதாரப் பாதிப்பின் சுமையை நாட்டு மக்கள் மீது முழுமையாகச் சுமத்தமுடியாது. அரசாங்கம் பல்வேறு செலவுகளைக் குறைத்துக்கொண்டால் மக்கள் மீதான வரி விதிப்பை கட்டுப்படுத்தமுடியும். பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் அரசாங்கம் அமைச்சரவை அமைச்சுக்களை விஸ்தரித்துக்கொள்ள அவதானம் செலுத்தியுள்ளது.

38 இராஜாங்க அமைச்சுக்கள் அவசியமற்றன. முன்னாள் ஜனாதிபதி கோத்தபய ராஜபக்ச 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் 2020ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் பொதுத்தேர்தல் இடம்பெறும்வரை ஒரு இராஜாங்க அமைச்சைக் கூட நியமிக்காமல் வரையறுக்கப்பட்ட அமைச்சுக்களுடன் அரச நிர்வாகத்தை முன்னெடுத்தார். இதை அரசாங்கம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகக் கொள்ள வேண்டும்.

மின்கட்டண அதிகரிப்பால் மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளார்கள். நாட்டில் மொத்த மின் பாவனையாளர்களில் 30 அலகுக்கும் குறைவான மின் அலகைப் பாவிக்கும் 14 லட்சம் மின்பாவனையாளர்கள் உள்ளார்கள். இவர்கள் பொருளாதார ரீதியில் கீழ்நிலை மட்டத்தில் உள்ளவர்கள்.

இந்தநிலையில் மின்கட்டணத்தை மீண்டும் அதிகரித்தால் நாட்டு மக்களுக்கு கடவுள்தான் துணை என பிரார்த்தனை செய்துகொள்ளவேண்டும். மின்கட்டண திருத்தம் தொடர்பான விடயத்தில் அரசாங்கம் உணர்வுபூர்வமாகச் செயற்படவேண்டும்.

மக்களிடம் வளம் இருந்தால்தான் மின்கட்டணத்தை செலுத்துவார்கள். மக்களால் தாங்கிக்கொள்ளமுடியாத அளவுக்கு கட்டணத்தை உயர்த்தினால் மக்கள் எவ்வாறு வாழ்வது என்பதை அரசாங்கம் சிந்திக்கவேண்டும் - என்றார். (எ-இ)



கடும் குளிர் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக நிலவி வரும் தொடர் பனிமூட்டத்தால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. போக்குவரத்தின்போதும் மக்கள் பல்வேறு இடர்பாடுகளை எதிர்நோக்கியுள்ளனர் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (ச-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத கடலட்டைப் பண்ணைக்கு இதுவரையில் எந்தவிதத் தீர்வுமில்லை

## யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 26

சட்டவிரோத கடலட்டைப் பண்ணைகள் அமைப்பது தொடர்பாக கரையோர பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத் துவத் திணைக்களத்துக்குக் கடிதம் அனுப்பப்பட்ட போதும் அதற்குத் தீர்வு வழங்கும் வகையில் எந்தவித பதிலையும் திணைக்களம் இதுவரை அளிக்கவில்லை – இவ்வாறு யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அ.அன்னராசா குற்றஞ்சாட்டியுள்ளார்.

சமகால நிலைமை தொடர்பாக யாழ்ப்பாணத்தில் கடந்த வெள்ளிக் கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப் பில் கருத்துத் தெரிவிக்கும்போதே - இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்த தாவது:

கடலட்டைப் பண்ணை தொடர்பான சந்தேகங்களும் கேள்விகளும் கடற்றொழிலாளர்களுக்கு எழுந்த நிலையில் அது தொடர்பான முறைப்பாடுகள் சம்மேளனத்துக் குக் கிடைக்கப் பெற்றன. அதனடிப் படையிலேயே கடலட்டைப் பண்ணைகளை மட்டுப்படுத்தி சிறு தொழிலாளர்களுக்கு பாதிப்பில்லாத வகையில் திட்டங்கள் மேற் கொள்ளப்பட வேண்டும் என்றும் மீன் உற்பத்தியாகும் பிரதேசங்க ளில் கடலட்டைப் பண்ணை அமைக்கக்கூடாது என்றும் கோரி னோம்.

அனுமதியைப் பெற்று கடலட்டைப் பண்ணையில் ஈடுபட்டால் அதில் எமக்கு எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால் கடலில் சீட் போட்டு கடலட்டைப் பண்ணைக்கு கொட்டில் அமைப்பதற்கு எந்த அதிகாரமும் யாருக்கும் இல்லை. எதிர் வரும் ஜனவரிக்கு இடையில் யாழ். மாவட்ட கரையோர பேணல் மற்றும் கரையோரமூலவள முகாமைத்துவத் திணைக் களம், நாங்கள் அனுப் பிய கடிதத்துக்கு பதில் அனுப்பா விட்டால் ஜனாதிபதி உட்பட சகல வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் இது தொடர்பான மனுவைக் கொடுப்போம். கரையோர சூழலைப் பாதுகாக்க வேண்டிய குறித்த திணைக்களம் இது தொடர்பாக மௌனமாக இருக்கின்றது - என் றார். (ம-14,20)

# கட்டாக்காலி மாடுகளை பிடித்தால் தண்டம்

முல்லைத்தீவு, டிசெ. 26

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப் பற்று பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அடுத்த வருடம் முதல் கட் டாக்காலி மாடுகளை பிடித்து தண்டப்ப ணம் அறவிட கரைதுறைப்பற்று பிரதேச சபையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் வீதி களில் திரியும் மாடுகளைப் பிடிக்கும் செயற்பாடுகள் பிரதேசசபையால் முன் னெடுக்கப்படவுள்ளன.

முதல் தடவை பிடிக்கப்படும் மாடு களுக்கு தண்டப்பணமாக 5 ஆயிரம் ரூபாவும் இரண்டாம் தடவை பிடிக்கப்ப டும் மாடுகளுக்கு தண்டப்பணமாக 7ஆயி ரத்து 500 ரூபாவும், மூன்றாம் தடவை பிடிக்கப்படும் மாடுகளுக்கு தண்டப்ப ணமாக 10 ஆயிரம் ரூபாவும் அறவிடப் படவுள்ளது.

நான்காம் தடவை சபையால் பிடிக்கப் படும் மாடுகள் சபையின் தீர்மானம் மற்றும் நீதிமன்ற ஆலோசனையின் பிர காரம் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் நீதிமன்றத்தில் ஒப்படைத்து சட்ட நடவ டிக்கை மேற்கொள்ளப்படும் என கரை துறைப்பற்று பிரதேசசபையின் தவிசாளர் அறிவித்துள்ளார்.

அத்துடன் பொது இடங்களில் குப்பை கொட்டுவதைத் தடுக்கும் முகமாக குப்பை கொட்டுவதை ஆதாரங்களுடன் காட்டித் தருபவர்களுக்கு அறவிடும் தண் டப்பணத்தில் 75 வீதத்தை சன்மானமாக வழங்கவும் சபையில் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. (ச-19)

# சம்பந்தனை சாட்சியாக்கி நீதியை உடன் வழங்குக

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், டிசெ. 26

13 வருடங்களாக தேடிய லைந்து கொண்டிருக்கும் எமது உறவுகள் எவரும் உயி ருடன் இல்லை என இரா. சம்பந்தன் சர்வகட்சி கூட்டத்தில் கூறியமையை வன்மையாகக் கண்டிக்கி றோம் - இவ்வாறு யாழ். ஊடக அமையத்தில் நேற்றுமுன்தி னம் சனிக்கிழமை இடம் பெற்ற ஊடகசந்திப்பில் கிளி நொச்சி மாவட்ட காணாம லாக்கப்பட்டோர் சங்க இணைப்பாளர் க.கோகில வாணி தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகை யில்:

எங்களின் உறவுகளை நாங் கள் 13 வருடங்களாகத் தேடி அலைந்து கொண்டிருக்கும் வேளையில் எமது உறவுகள் எவரும் உயிருடன் இல்லை. அவர்களுக்கு இரண்டு லட் சம் ரூபா இழப்பீடு கொடுங் கள் என சம்பந்தன் கூறியுள் ளார். சம்பந்தன் இவ்வளவு காலமும் இதனைத் தெரியப் படுத்தாது இருந்தமைக்கு காரணம் என்ன?

அவர் இவ்வாறு சொல்வதால் அவருக்கு எமது உறவுகளை கொன்றது யாரெனத் தெரி யும். கொல்லப்பட்டதற்கு அவரே ஒரு சாட்சியாக உள் ளார். எனவே அவரை ஒரு சாட்சியாகக் கொண்டு இனப் படுகொலையாளிகளை சர்வ தேச குற்றவியல் நீதிமன்றத் தில் ஒப்படைக்கவேண்டும். இதன்மூலம் எமக்கு சர்வதே சநீதியைப்பெற்றுத்தரவேண் டும். தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் அமைப்பாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரையறுக்கப்பட்டிருந்தது. எனினும் இன்று தமிழ்த் தேசி யத்தைக் குழிதோண்டி புதைக் கும் ஓர் அமைப்பாக அதை மாற்றிவருகின்றனர். பாதிக் கப்பட்ட தாய்மார்களின் கண் ணீரில் நீங்கள் அரசியல் செய்யவேண்டாம். இழப்பீட் டைப் பெறுவதற்கு நாம் இதுவ ரைகாலமும் போராடவில்லை. போலியானவர்களின் வார்த் தைகளை நம்பி ஏமாறாது ஒட்டுமொத்த தமிழர்களும் இனி விழிப்பாக இருக்கவேண் டும் - என்றார். (ச-27)

# பாலின் விலை அதிகரிக்கிறது

யாழ்ப்பாணம், டிசெ. 26



பண்ணையாளர்களி னதும் உற்பத்தியாளர் களினதும் நலன்கருதி பாலின் விலையிலும், பால் சார்ந்த உற்பத் திப் பொருள்களினதும் விலைகளை அதிக ரிக்க யாழ்கோ தீர்மானித்துள்ளது.

இதன்படி மாற்றப்பட்ட விலையாக ஒரு லீற்றர் பால் 220 ரூபாவுக்கும், ஒரு லீற்றர் தயிர் 260 ரூபாவுக்கும் விற்பனை செய் யப்படவுள்ளது.

இதேவேளை- பால் சார்ந்த ஏனைய உற் பத்திப் பொருள்களின் விலைகளிலும் மாற்றம் செய்யப்படவுள்ளது. (ம-17)

# பொலிஸாரைக் காயப்படுத்தி மோ.சைக்கிளில் தப்பியோட்டம்

சாவகச்சேரி, டிசெ. 26

வேகமாகப் பயணித்த மோட்டார் சைக்கிளை நிறுத்து மாறு சமிக்ஞை செய்த பொலிஸ் அலுவலரின் கையை, கூரிய ஆயுதத்தால் காயமேற்படுத்திவிட்டு மோட்டார் சைக்கிளில் வந்தோர் தப்பிச் சென்றுள் ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நாவற்குழியில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை முன்னெ டுத்துள்ளனர். (ச-9)

# படையினரும் காணாமல்போனார்களென அலி சப்ரி கூறுவது புனைகதை!

## காணாமலாக்கப்பட்டோர் சங்கத்தினர் கண்டனம்

யாழ்ப்பாணம், டிசெ. 26

போரில் 3 ஆயிரத்துக்கும் மேற் பட்ட இராணுவத்தினர் காணா மற்போயுள்ளனர் என அமைச் சர் அலிசப்ரி கூறுவது புனை கதையே. இதுதொடர்பில் அவர் ஆதாரத்துடன் நிரூபிக்கவேண் டும் - இவ்வாறு வடக்கு- கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப் பட்டோர் சங்கத்தின் செயலாளர் லீலாதேவி கோரிக்கை விடுத் துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம் பெற்ற ஊடகசந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அமைச்சர் அலிசப்ரி அண்மை யில் கொழும்பு ஊடகமொன் றுக்கு வழங்கிய நேர்காணலில், காணாமல் ஆக்கப்பட்டோ ருக்கான ஆதாரங்கள் இருந் தால் நடவடிக்கை எடுப்போம். போரின்போது இராணுவத்தின ரும் காணாமற்போயுள்ளனர். 24 ஆயிரம் இராணுவத்தினர் உயிரிழந்துள்ளனர் எனக் கூறி யுள்ளார்.

அவரிடம் நாம் கேட்கிறோம், இரா ணுவம் இறந்ததாகக் குறிப்பிடும் உங்களுக்கு அப்பாவிப் பொது மக்கள் அழிக்கப்பட்டமை கண் ணுக்குத் தெரியவில்லையா? நாங்கள் போரில் இறந்த எமது உறவுகளைக் கேட்கவில்லை. பாதுகாப்புத் தரப்பினரிடம் விசா ரணைக்காக ஒப்படைத்த எமது உறவுகள் எங்கே? என்றே கேட்கி றோம். இதற்கு அமைச்சர் அலி சப்ரி புனைகதைகளைக் கூறி திசைதிருப்பப் பார்க்கிறார்.

அத்துடன் முஸ்லிம் மக்கள் வடக் கிலிருந்து வெளியேற்றப்பட்டதை பெரும் பிரச்சினையாக உருவ கித்து நேர்காணலில் கூறுகிறார். அண்மைக்காலத்தில் முஸ்லிம் மக்கள் கொல்லப்பட்டபோதும் கடைகள் தீக்கிரையாக்கப்பட்ட போதும் வாய் மூடி மௌனியாக அரசாங்கத்துக்குப் பின்னால் நின்றவரே அமைச்சர் அலி சப்ரி. அவர் எமது உறவுகள் காணா மல் ஆக்கப்பட்டமை தொடர்பில் உண்மைக்கு புறம்பான விடயங் களை ஊடகங்களில் பேசுவதை நாம் வன்மையாகக் கண்டிக்கி றோம்- என்றார். (ச-20)

# தென்னிலங்கையர்கள் வடக்குக்குச் சுற்றுலா

வருட இறுதி விடுமுறையையும், பண்டிகைகளையும் கொண்டாடுவதற்காக தென்னிலங்கையில் இருந்து நூற்றுக்கணக்கானவர்கள் வடமாகாணத்துக்குச் சுற்று லாவுக்காக வருகைதர ஆரம்பித்துள்ளனர்.

வடமாகாணத்திலுள்ள பல்வேறு சுற்றுலாத்தலங்களிலும், வழிபாட்டுத்தலங்களிலும் அவர்களைக் காணக்கூடிய தாக உள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



### பிள்ளையார் கதை

மொட்டறு மலர் பறித்து முழுமனதோ டர்ச்சித்து
இட்டமுடன் இரக்கின்றோம் இன்னருளை வேண்டுகின்ற
தொல்வினைகளைத் தொலைத்துக் குறைவில்லா தருள்காட்டியுன்
செங்கமலப் பொற்பாதம் சேர்

-முருகு

## சிறைச்சாலையிலுள்ள 74 வீதமான கைதிகளுக்கு போதைப்பொருள் தொடர்பு

### நீதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 26

சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளில் 74 சதவீதமானோர் போதைப்பொருள் வியாபாரம் மற்றும் பாவனையுடன் தொடர்புடையவர்கள் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் போதைப்பொருள் விற்பனை மற்றும் வியாபாராம் தீவிரமடைந்துள்ளது. பாடசாலை மாணவர்களின் புத்தகப் பைகளைச் சோதனை செய்வது சிறந்த எடுத்துக்காட்டு அல்ல.

பாடசாலை மாணவர்களின் புத்தகப்பைகளை சோதனை செய்வதை விடுத்து நாட்டுக்குள் வரும் போதைப்பொருள்களைத் தடுப்பது பொருத்தமானதாக அமையும் என சமூகத்தில் குறிப்பிடுவதை ஏற்றுக்கொள் கிறோம். போதைப்பொருள் தொடர்பான சுற்றிவளைப்புக்கள் தற்போது தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

ஐஸ் போதைப்பொருளுக்கு எதிரான சட்டம் கடந்த நவம்பர் மாதம் வரை நாட்டில் நடைமுறையில் இருக்கவில்லை. சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளின் மொத்த எண்ணிக்கையில் 74 சதவீதமானோர் போதைப்பொருள் விற்பனை மற்றும் பாவனையுடன் தொடர்புடையவர்கள்.

ஏனைய கைதிகள் போதைப்பொருளுக்காக கொலை, கொள்ளை உள்ளிட்ட சமூக விரோதச் செயற்பாடுகளுடன் ஏதாவதொரு வழிமுறையில் தொடர்புடையவர்கள் - என்றார். (ம)

## ரூ. 166 மில். பெறுமதியான போதைப்பொருள்கள் மீட்பு!

### பொம்மைகள், உணவு ரின்களுக்குள் சூட்சுமமாக இலங்கைக்கு அனுப்பல்

கொழும்பு, டிசெ. 26

165.9 மில்லியன் ரூபா பெறுமதியான ஐஸ் மற்றும் குஷ் போதைப் பொருள்களை பொம்மைகள் மற்றும் உணவு ரின்களுக்குள் மறைத்து தபால் மூலம் இலங்கைக்கு அனுப்பப்பட்ட நிலையில், அவை மத்திய தபால் பரிமாற்றகத்தில் மீட்கப்பட்டுள்ளன என சுங்க ஊடகப் பேச்சாளரும், சுங்கப் பணிப்பாளருமான சுதத்த சில்வா தெரிவித்தார்.

ஸ்பெயின், ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, கனடா, நெதர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்தே இவை தபால் சேவை ஊடாக இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை இந்தப் பொதிகளைப் பெற பெறுநர்கள் முன்வராததால் இலங்கை சுங்கத் திணைக்களத்தின் தபால் மதிப்பீட்டுப் பிரிவின் அதிகாரிகள், தபால் திணைக்களத்தின் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் ஊழியர்கள் முன்னிலையில் பொதிகள் பரிசோதிக்கப்பட்டன.

இதன்போது 7 பொதிகளில் இருந்த பொம்மைகள், உணவுகள் அடங்கிய ரின்களில் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அதிகளவு போதைப்பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன. (ச-இ)

## இயந்திரப் படகுகளுக்கு ம.எண்ணெய் மானியம்!

மன்னார், டிசெ. 26

கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்களத்தால் தொடர்ச்சியாக கடற்றொழில் புரியும் இயந்திரப் படகுகளுக்கு மண்ணெண்ணெய் மானிய விலையில் வழங்கப்படவுள்ளது என மன்னார் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

மீனவர்கள் தத்தம் கடற்றொழில் பிரிவுக்குரிய அலுவலர் ஊடாக 'கே.எவ்.ஆர் 01' எனும் விண்ணப்பத்துடன், படகு அல்லது வள்ளம் மற்றும் இயந்திர முறைப்படி பதிவு செய்தமை உறுதிசெய்யப்பட்ட பதிவுப் புத்தகப் பிரதி, இந்தாண்டு பெறப்பட்ட கடற்றொழில் அனுமதிப்பத்திரம் ஆகியவற்றை எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கவேண்டும். அத்துடன் சரியான முறையில் படகின் பதிவு இலக்கம் படகில் பொறிக்கப்பட்டிருக்கவேண்டும்- என்றார். (ச-60)

## இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** மனதில் உற்சாகம் ஊற்றெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். உங்கள் முயற்சிக்கு ஆதரவு கிடைப்பது மகிழ்ச்சி தரும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**இடபம்:** புதிய முயற்சிகளை தொடங்குவது சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் கையிருப்பு குறையும். மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**மிதுனம்:** மகிழ்ச்சியான நாள். துணிச்சலுடன் முடிவெடுப்பீர்கள். எடுத்த காரியத்தைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். காரியங்கள் அனுகூலமாகும்.

**கடகம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். சங்கடங்கள் ஏற்பட்டாலும் பெரிய பாதிப்பு எதுவுமிருக்காது. வீண் செலவுகள் ஏற்படும். விற்பனையும் லாபமும் குறைவாகத்தான் இருக்கும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. வெளியிடங்களில்சாப்பிடுவதைத் தவிர்க்கவும். பணிகள் அதிகரிக்கும்.

**கன்னி:** பணவரவு திருப்தி தரும். உடல்நலனில் கவனம் தேவை. எதிர்பாராத செலவுகள் ஏற்படும். மனதில் அடிக்கடி குழப்பங்கள் ஏற்படும். சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**துலாம்:** மனதில் குழப்பங்கள் நீங்கி உற்சாகம் ஏற்படும். காரியங்கள் அனுகூலமாகும். வெளியூர்ப் பயணங்களைத் தவிர்க்கவும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**விருச்சிகம்:** இன்று புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். செலவு செய்ய நேரிடும். வீண்விவாதத்தில் ஈடுபட வேண்டாம்.

**தனுசு:** மனதில் உற்சாகம் அதிகரிக்கும். விறுவிறுப்பாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும். கருத்து வேறுபாடு நீங்கும்.

**மகரம்:** எதிர்பாராத பணவரவு இருந்தாலும் திடீர் செலவுகளும் ஏற்பட்டு திணற வைக்கும். இழுபறி நிலை அனுகூலமாக முடியும். வெளியூர்ப் பயணம் தவிர்க்கவும்.

**கும்பம்:** உற்சாகமான நாள். காரியங்கள் அனுகூலமாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அவருடன் மன வருத்தம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பொறுமையாக நடந்துகொள்ளவும்.

**மீனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு சகோதரர்களால் எதிர்பாராத செலவுகளுக்கு வாய்ப்பு உண்டு. யோகம் ஏற்படும். ஆதாயம் உண்டாகும்.

## 2023 புத்தாண்டு ராசிபலன்

மார்கழி மாதம் 17ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை வளர்பிறை தசமி திதியில், சம நோக்குடைய அஸ்வினி நட்சத்திரம், மேடம் ராசி, கன்னி லக்னத்தில், சிவம் நாமயோகத்தில், தைத்துலம் நாமகரணத்தில், நள்ளிரவு 12.01 மணிக்கு 01.01.2023 ஆம் ஆண்டு பிறக்கிறது.



சிம்மம்

கலாசாரத்தில் பிடிப்புள்ளவர் நீங்கள். உங்கள் ராசிக்கு 9வது ராசியில் 2023 புத்தாண்டு பிறப்ப தால் பணவரவு சரளமாக உயரும். எதிர்ப்புகள் அகலும். கடன் பிரச்னையிலிருந்து விடுபடக் கடினமாக உழைப்பீர்கள். ஆரோக்கியம் கூடும்.

வீட்டில் சுபகாரியங்கள் நடக்கும். உங்கள் ரசனைக்கேற்ப வீடு அமையும். எதிர்பார்த்த பணம் வரும். உங்கள் ராசிக்கு 5ம் வீட்டில் புதன் நிற்கும்போது புத்தாண்டு பிறப்பதால் பிரபலங்களின் தொடர்பு கிடைக்கும்.

22.04.2023 வரை குருபகவான் உங்கள் ராசிக்கு 8ஆவது வீட்டில் மறைந்திருப்பதால், செலவுகள் துரத்தும்; எதிர்பாராத பணவரவும் உண்டு.

23.04.2023 முதல் வருடம் முடிய உங்கள் ராசிக்கு 9ம் வீட்டில் குருபகவான் அமர்வதால், எதிலும் வெற்றி பெறுவீர்கள். கௌரவப் பதவிகள் தேடி வரும். சலுகையோடு நல்ல வேலை கிடைக்கும். ஏளனப் படுத்தியவர்கள் எல்லாம் இனி உங்களைப் பாராட்டுவார்கள்.

புத்தாண்டின் தொடக்கத்தில் சனிபகவான் ராசிக்கு 6வது வீட்டிலேயே வலுவாக இருப்பதால், பிரச்சினைகளைச் சமாளிக்கும் வல்லமை பிறக்கும். 29.03.2023 முதல் 23.08.2023 வரை சனிபகவான் அதிசாரத்தில் 7ம் வீடான கும்ப ராசியில் சென்று அமர்வதால், சிறிது தடுமாற்றமும், வீண் செலவுகளும் வந்து போகும்.

08.10.2023 வரை உங்கள் ராசிக்கு 3ம் வீட்டில் கேது நிற்பதால் எதையும் திட்டமிட்டுச் செய்வீர்கள். 09.10.2023 முதல் வருடம் முடியும் வரை, கேது உங்கள் ராசிக்கு 2ம் வீட்டிலும், ராகு 8ம் வீட்டிலும் அமர்வதால் சிறுசிறு விபத்துகள் ஏற்படக் கூடும். வெளி வட்டாரத்தில் விமர்சனங்களைத் தவிர்க்கவும். ஜூன், ஜூலை, நவம்பர் மாதங்களில் திடீர் திருப்பங்களும், அதிரடி லாபமும் உண்டாகும்.

**மொத்தத்தில் இந்தப் புத்தாண்டு புகழையும் பணவரவையும் பெற்றுத் தருவதாக அமையும்.**

**பரிகாரம்:** ஞாயிற்றுக்கிழமைகளில் துர்கை தரிசனமும் வழிபாடும் நன்மை அளிக்கும். பிரச்சினைகள் விலகும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலாலியும் பறப்பும்!

பலாலி சர்வதேச விமான நிலையம் விஸ்தரிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைகள் நாளுக்குநாள் வலுப்பெற்றுவருகின்றன. போரால் பாதிக்கப்பட்ட தேசத்தின் உட்கட்டுமானங்களைப் பலப்படுத்த வேண்டுமென்ற அடிப்படையிலும் பலாலி விமான நிலையத்தின் தற்காலத் தேவை கருதியும் இந்த வலியுறுத்தல்கள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பில் கூடுதல் கரிசனை கொண்டு, அதைச் சாதகமாகப் பரிசீலிக்க வேண்டிய தேவை அரசுக்கும் இருக்கவே செய்கின்றது. ஆனால், அதை கொழும்பு எவ்வளவுதூரம் செவிசாய்க்கப்போகின்றது? - செயல் வடிவம் கொடுக்கப்போகின்றது? என்பது விடையில்லா வினாக்களாகவே நீள்கின்றன.

பலாலி விமான நிலையம் ஒரு 'சர்வதேச' விமான நிலையம் என்றே அடையாளப்படுத்தப்படுகின்றது. ஆனால், இந்த விமான நிலையத்துக்கு அரசாங்கத்தால் (கொழும்பால்) கொடுக்கப்பட்ட சர்வதேச பிம்பம் வெறும் கண்துடைப்பே. காரணம், சர்வதேச விமான நிலையத்துக்கு இருக்கவேண்டிய எந்த அம்சங்களும் பலாலி சர்வதேச விமான நிலையத்தில் இல்லை என்பதுதான் உண்மை. சர்வதேச தர அங்கீகாரம் பெற்ற எந்தவொரு விமானங்களும் இலாவகமாகத் தரையிறங்கக்கூடிய ஓடுபாதைகூட இல்லாமல், அதாவது ஒரு விமான நிலையத்துக்கு இருக்க வேண்டிய ஆகக்குறைந்த அம்சமேனும் இல்லாமற்தான் இந்த 'சர்வதேச பிம்பம்' பலாலி விமான நிலையத்துக்கு வலிந்து திணிக்கப்பட்டுள்ளது.

பலாலி விமான நிலையம் சர்வதேச தரத்துடன் மாற்றியமைக்க வேண்டிய தேவை தற்போதிருக்கின்றது. வெறும் ஒரேயொரு கிலோமீற்றர் ஓடுபாதைதான் இதற்குத் தேவையாகவும் இருக்கின்றது. இந்த ஒரு கிலோமீற்றர் ஓடுபாதைக்குரிய நிலப்பரப்பை வழங்கும் பட்சத்தில், இந்தியா இந்த விமான நிலையத்துக்காக முதலிடுவதற்குத் தயாராகவே இருக்கின்றது. இந்தியாவின் இந்த அபிவிருத்திப் பார்வையில், பிராந்திய நலன் என்பது மேலோங்கி நிற்கின்றபோதிலும், அனைத்துக்கும் மேலாக ஒரு நிரந்தர அபிவிருத்திக்கான - டொலரை ஈட்டுவதற்கான வாயில் இலங்கைக்கு அகலத்திறக்கும் என்பது நிதர்சனம். ஆனால், இந்த ஓடுபாதைக்குரிய நிலப்பரப்பு படையினர் வசமுள்ள பகுதியாதலால், இதுவும் இந்த விமான நிலைய அபிவிருத்திக்கு சிக்கலாகியிருக்கின்றது. படையினரை தேவையற்ற விடயங்களில் முதன்மைப்படுத்தி தன் தலையில் மண்போடுவது கொழும்புக்குப் புதிதல்ல. இதுவும் அந்தத் தொடர்கதையின் ஒருபகுதியே.


பலாலி விமான நிலையம் சர்வதேசத் தரத்துடன் சீரமைக்கப்படும் பட்சத்தில் அது இந்த நாட்டின் அதி முக்கியம் மிக்கதான விமான நிலையமாக மாற்றம்பெறும். தற்போது கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் நாட்டின் முதன்மை விமான நிலையமாக இருக்கின்றபோதிலும், அதன் அதிகப்படியான பயன்பாட்டைக் கையில் வைத்திருப்பது (சுற்றுலாவிகள் நீங்கலாக) புலம்பெயர் தமிழர்கள்தான். இவ்வாறிருக்கையில் பலாலி விமான நிலையத்தை தரவுயர்வு செய்துவிட்டால், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் தன் வருவாயை அதிகம் இழக்கும். புலம்பெயர் தமிழர்கள் கொழும்புக்கு வந்து, பின்னர் அங்கிருந்து ஒருநாள் பயணமாக வடக்குக்கு வருவதற்குப் பதிலாக, நேராக பலாலியில் வந்திறங்குவார்கள். சென்னையில் இருந்து மட்டுமல்லாமல் இந்தியாவின் இதர மாநிலங்களில் இருந்தும் விமானப் பயணங்கள் விஸ்தரிக்கப்படும். இவையெல்லாம் சேர்ந்துதான் பலாலி விமான நிலைய அபிவிருத்தி கொழும்பின் கண்களை துருத்திக் கொண்டிருக்கின்றது.

பலாலியால் வந்தாலென்ன, கட்டுநாயக்கவால் வந்தாலென்ன அனைத்தும் நாட்டின் வருவாய்தான். இந்தக் குறைந்தபட்சப் புரிதல் இல்லாததால்தான் இலங்கை இன்று இந்தளவுதூரம் பொருளாதாரச் சிதிலத்தை எதிர்கொண்டிருக்கின்றது. இந்தப் பொருண்மியப் பேரிடர் வெவ்வேறு விடயங்களில் விதம்விதமான வடிவங்களில் இனியும் தொடரத்தான் போகின்றது என்பதற்கு பலாலி விமான நிலையம் ஒரு சான்று. வருவாயைவிடவும் 20 மடங்கு செலவு அதிகமாகவுள்ள மத்தள ராஜபக்ச சர்வதேச விமான நிலையத்தை இயக்க முடியுமாக இருக்கின்ற அரசாங்கத்துக்கு, பலாலி விமான நிலையத்தின் பரந்துபட்ட வருவாய் கண்களுக்குத் தெரியவில்லையென்றால் வேறென்ன சொல்வது (?)

## நாளொரு நல்வார்த்தை

"உங்களைப் பற்றிய பிறரது அபிப்பிராயங்கள் வெறும்காலி அபிப்பிராயங்கள். உங்களைப் பற்றிய உங்களது அபிப்பிராயம் உங்கள் வெற்றி மாளிகையின் அத்திபாரம்"

– சுகி.சிவம்



# இனப்பிரச்சினைப் பேச்சு மத்தியஸ்தம் அவசியம்!

## சாள்ஸ் எம்.பி. வலியுறுத்து



மன்னார், டிசெ. 26

இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா போன்ற ஏதாவது ஒரு நாட்டின் மத்தியஸ்தம் இல்லாமல் இலங்கை அரசாங்கத்துடன் பேச்சு நடத்துவதில் எந்தப் பயனும் இல்லை. இது வெறுமனே காலத்தைக் கடத்தும் செயற்பாடு என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கான முன்னெடுப்புக்கள் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களுக்கான தீர்வை நோக்கிய அறிவிப்பை அல்லது முன்மொழிவை பல இடங்களில் கூறியிருக்கின்றார். இவ்வாறு அவர் வெளிப்படுத்திய கருத்துக்களுக்குப் பின்னால், சர்வதேச நாடுகளுடைய அழுத்தங்கள் காரணமாக இருக்கலாம். ஏனென்றால் இன்று இலங்கையில் ஏற்பட்டு இருக்கின்ற பொருளாதார நெருக்கடியை சர்வதேச நாடுகளுடைய உதவி இல்லாமல் இலங்கையால் கையாள முடியாது.

சர்வதேச ஆதரவுத்தளம் இல்லாமல் பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கையால் மீளமுடியாது.

ஆகவே சர்வதேச நாடுகளை திருப்திப்படுத்துவதற்கு நாட்டினுடைய ஜனாதிபதி இந்தக் கருத்துக்களை, முன்மொழிவுகளை முன்வைத்திருக்கலாம்.

ஆனால், இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் முதலில் தமிழ்க் கட்சிகளும் மதத் தலைவர்களும் ஒரு பொதுவான இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும். அதை விடுத்து, ஒவ்வொரு கட்சிகளும் ஒவ்வொரு பிரதிநிதிகளும் ஒவ்வொரு விதமாகக் கதைப்பதென்பது காலத்தை இழுத்தடிக்க வாய்ப்புக்களை ஏற்படுத்துவதுடன், தமிழ்த் தரப்பைப் பலவீனப்படுத்தவும் செய்யும்.

அதேநேரம், இலங்கை அரசாங்கத்துடன் பேச்சு நடத்தும்போது வலுவான ஒரு மத்தியஸ்தத்துடன் நாம் செல்லவேண்டியுள்ளது.

ஏனெனில் 1948ஆம் ஆண்டிலிருந்து ஆட்சியாளர்களுடன் பேசிக் கொண்டிருக்கின்றோம்.

ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன, பின்னர் அவை கிழிக்கப்பட்டன. இந்திய - இலங்கை ஒப்பந்தம்கூட முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஆகவே வெறுமனே இலங்கை அரசாங்கத்துடன் பேசி தமிழ் மக்களுக்கு உரியதீர்வைப் பெற முடியும் என்ற நம்பிக்கை எனக்கில்லை. ஆதலால், சர்வதேச நாடுகளான இந்தியா, பிரித்தானியா அல்லது அமெரிக்கா இவற்றில் ஏதாவது ஒன்றின் மத்தியஸ்தத்துடனாவது பேச்சை முன்னெடுக்கவேண்டும் - என்றார். (ம-213)

**நாளை**

27.12.2022
செவ்வாய்க்கிழமை
மார்கழி 12

சுபநேரம் : 10.57 - 12.27
ராகுகாலம் : 03.27 - 04.57

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனவரி முதல் வாரத்துக்குள் தேர்தல் திகதியை வழங்குக!

## இல்லாவிடின் நீதிமன்றம் நாடுவோம் பவ்ரல் அமைப்பு எச்சரிக்கைத்தொனி

கொழும்பு, டிசெ. 26

ஜனவரி முதல் வாரத்துக்குள் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடைபெறும் திகதி தொடர்பில் அறிவிக்காவிடின் நீதிமன்றை நாடுவோம். தேர்தலை நடத்தவேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு இருக்கின்றது – இவ்வாறு பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தவேண்டிய தேவை சட்டரீதியில் வெளிப்பட்டுள்ளது. ஆயினும் உள்ளூராட்சித் தேர்தலை பிற்போடுவதற்காக பல்வேறு திட்டங்கள் கையாளப்பட்டு வருகின்றன. எந்த நிலமையிலும் சரி தேர்தலை நடத்துவது கட்டாயம். இது நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு நேரடி தீர்வாக இல்லாவிட்டாலும் சட்ட ரீதியில் தேர்தலை நடத்தவேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு இருக்கின்றது.

அதன்படி எதிர்வரும் மார்ச் 19ஆம் திகதிக்குள் உள்ளூராட்சி மன்றங்களுக்கு மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்படவேண்டும். அடுத்த வரும் ஜன வரி முதல் வாரத்துக்குள் உள்ளூராட்சி மன்ற தேர்தல் இடம்பெறும் திகதி தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு தெளிவானதொரு அறிவிப்பை விடுக்க வேண்டும். இல்லாவிடின் நாம் நீதிமன்றம் செல்லவேண்டிய நிலை ஏற்படும் - என்றார். (ச-இ)

## தினேஷ் சாப்டர் படுகொலை; ஒருவர் தீவிர கண்காணிப்பில்

கொழும்பு, டிசெ. 26

பிரபல வர்த்தகர் தினேஷ் சாப்டர் படுகொலை விவகாரத்தில், இதுவரையான விசாரணைகளின் அடிப்படையில் கொலையாளி எனச் சந்தேகிக்கப்படும் சந்தேகநபர் ஒருவர் சி.ஐ.டி சிறப்புக்குழுவின் 24 மணிநேர கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

தினேஷ் சாப்டர் படுகொலை தொடர்பில் சி.ஐ.டி. பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரசாத் ரணசிங்கவின் மேற்பார்வையில் இந்த சிறப்பு விசாரணைகள் இடம் பெற்றுவருகின்றன.

கொலையாளி எனச் சந்தேகிக்கப்படும் குறித்த நபர் தொடர்பில் இதுவரையில் உறுதியான சாட்சியம் கிடைக்கவில்லை. அதனால் அவரைக் கைதுசெய்யாது பல கோணங்களில் சிறப்பு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. உறுதியான சாட்சியத்தை வெளிப்படுத்த தொலைபேசி பகுப்பாய்வுகள் மும்முரப்படுத்தப்பட்டுள்ளன. உறுதியான தடயம் கிடைக்கும் பட்சத்தில் குறித்த சந்தேகநபர் கைது செய்யப்படுவார்.

இதேவேளை இந்தப் படுகொலை தொடர்பில் இதுவரை 60க்கும் அதிகமானோரிடம் வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன என பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவவின் தெரிவித்தார். (ச-இ)

## பெருந்தோட்டக் காணிகள் பறிபோகும் அபாய நிலை

*வேலுகுமார் எம்.பி. சுட்டிக்காட்டு*

கொழும்பு, டிசெ. 26



பெருந்தோட்டக் காணிகள் பறிபோகும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் ஏற்பட்டுள்ள உணவுப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதில் பிரதானமானதாக உணவு பாதுகாப்பு வேலைத் திட்டம் அமைந்திருக்கின்றது. இந்தத் திட்டத்தின் பின்னணியில் பெருந்தோட்டங்களில் காணப்படும் பயிரிடப்படாத காணிகளைப் பகிர்ந்தளிப்பது தொடர்பாக பேசப்படுகின்றது.

உணவு பாதுகாப்புக்காக பிரதேசசெயலக மட்டத்திலே குழுக்கள் அமைக்கப்படுகின்றன. பயிரிடப்படாத காணிகளை இனங்காண்பதற்கும் அவற்றை தேவையுடையோருக்கு பகிர்ந்தளிப்பதற்கும், அக்காணிகளில் பயிரிடுவதற்கு அவசியமான வசதிகளை ஏற்பாடு செய்வதற்கும் இக்குழுக்களுக்கு அதிகாரம் வழங்கப்படவுள்ளது. அதன்போது, பெருந்தோட்டங்கள் காணப்படும் பகுதிகளில் அங்கு காணப்படும் பயிரிடப்படாத நிலங்களும் பகிரப்படவுள்ளன.

பெருந்தோட்டக் காணிகள் வெளியாருக்குப் பகிர்ந்தளிப்பதற்கான வாய்ப்புகளே அதிகம் உள்ளது. இந்த நிலைமையைத் தடுக்க முன்கூட்டியே நாம் செயற்பட வேண்டும். பெருந்தோட்ட காணிகளின் பகிர்வு தொடர்பாக விசேட பொறிமுறையொன்று உருவாக்கப்பட வேண்டும் - என்றார். (ம-14)

சீனாவில்

## 250 மில்லியன் மக்கள் கொரோனாவால் பாதிப்பு


*சர்வதேச ஊடகங்கள் அதிர்ச்சித் தகவல்*

கொழும்பு, டிசெ. 26

சீனாவில் இந்த மாதம் 20ஆம் திகதி வரையான காலப்பகுதியில் சுமார் 250 மில்லியன் மக்கள் (25 கோடி பேர்) கொரோனாவால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்று சர்வதேச ஊடகங்கள் அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளன.

சீன சுகாதாரத்துறை அதிகாரிகளின் உள்ளக ஆவணங்கள் மூலம் இந்தத் தகவல் கசிந்துள்ளது என்று அந்த ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. இந்தத் தகவல் உண்மையென்றால் 18 வீதமான மக்களுக்கு சீனாவில் கொரோனாத் தொற்று உள்ளது என்று தெரிவித்துள்ள சி.என்.என். ஊடகம், எனினும் இந்த் தகவலை உறுதிசெய்ய முடியவில்லை என்றும் தெரிவித்துள்ளது. (ம)

## மிரட்டும் புதிய கொரோனா: அவதானத்துடன் இலங்கை



கொழும்பு, டிசெ. 26

கொரோனாவின் உருமாறிய வகையான பிஎவ்7 வகை ஒமிக்ரோன் திரிபு வைரஸால் பாதிக்கப்பட்டு இந்தியாவில் 4 பேர் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் தொடர்பில் சுகாதார அமைச்சு கடும் அவதானம் செலுத்தியுள்ளது.

இதுகுறித்து சுகாதார அமைச்சின் செயலாளர் தெரிவித்ததாவது:-

அதிவேகமாக பரவுகிற தன்மையைக் கொண்டுள்ள இந்த வைரஸ் சீனாவில் மட்டுமின்றி அமெரிக்கா, பிரித்தானியா, பெல்ஜியம், ஜேர்மனி, பிரான்ஸ், டென்மார்க் ஆகிய நாடுகளிலும் பரவியுள்ளது. அத்துடன் இந்தியாவிலும் இந்தப் புதிய கொரோனா மாறுபாடுகளால் பாதிக்கப்பட்ட 4 பேர் கண்டறியப்பட்டுள்ளனர்.

அதன்காரணமாக நாட்டுக்கு வரும் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் மீண்டும் கொரோனா பரிசோதனைக்கு உட்படுத்தப்பட நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. எதிர்காலத்தில் மீண்டும் முகக்கவச பாவனையை கட்டாயமாக்கும் யோசனை ஒன்றும் கொண்டுவரப்படவுள்ளது - என்றார். (ச-இ)

## விபத்தில் நால்வர் காயம்

சாவகச்சேரி, டிசெ. 26

மோட்டார் சைக்கிளை சடுதியாக நிறுத்தியதால் ஏற்பட்ட விபத்தில் காயமடைந்த நான்கு பேர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை கொடிகாமத்தில் இடம்பெற்றது.

முன்னால் சென்ற வாகனம் திடீரென நிறுத்தப்பட்டதையடுத்து, வாகனத்தின் பின்னால் சென்ற மோட்டார் சைக்கிளை சடுதியாக நிறுத்தியதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இதில் 2 மற்றும் 6 வயதுடைய சிறுவர்களும் தம்பதியரும் காயமடைந்தனர். (ச-9)

## பொலிஸாரின் பணிகளுக்கு இந்திய அரசால் வாகனங்கள்

கொழும்பு, டிசெ. 26

இலங்கைப் பொலிஸாரின் பாதுகாப்புப் பணிகளுக்காகப் பயன்படுத்த இந்தியா 125 வாகனங்களை வழங்கியுள்ளது என்று இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்தியத் தூதரகம் வெளியிட்டுள்ள ருவிற்றர் பதிவில் உள்ளதாவது, 'இலங்கைக்கு இந்தியாவின் ஆதரவு எப்போதும் தொடரும். இலங்கை பொது பாதுகாப்புத்துறை அமைச்சர் டிரான் அலஸிடம் பொலிஸாரின் பாதுகாப்புப் பயன்பாட்டுக்காக 125 வாகனங்களை இந்தியா வழங்கியுள்ளது.

கோபால் பாக்லே இந்த வாகனங்களை ஒப்படைத்தார். உறுதி அளிக்கப்பட்ட 500 வாகனங்களில் மீதமுள்ள 375 வாகனங்களும் விரைவில் ஒப்படைக்கப்படும் - என்றுள்ளது. (ம-14,இ)



வவுனியா திருநாவற்குளத்தில் அமைந்துள்ள சிறீ சபரீஷன் ஐயப்ப தேவஸ்தானத்தில் விசேட மலையாள பூசை கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றது. (ம-14,110)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வசந்த முதலிகேயை விடுவிக்கக் கோரி சிறைச்சாலை ஆணையாளருக்குக் கடிதம்

## பூஸா சிறைக்கு மாற்ற முயற்சி என்றும் சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 26

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகேயை உடனடியாக விடுதலை செய்யுமாறும் அனைத்து அரசியல் கைதிகள் மற்றும் பயங்கரவாதத் தடைச்சட்டக் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும் சிறைச்சாலை ஆணையாளரிடம் மக்கள் பேரவைக்கான இயக்கம் கடிதம் ஒன்றைக் கையளித்துள்ளது.

அந்தக் கடிதத்தில் உள்ளதாவது:-

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே தற்போது அரசியல் காரணங்களுக்காக நீதிமன்ற உத்தரவின் பேரில் பயங்கர வாதத் தடைச்சட்டத்தின் கீழ் கொழும்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தத் தடுப்பு நடவடிக்கைக்கு முன்னதாக அவர் 90 நாள்கள் மிக மோசமான சூழலில் தடுப்பு முகாமில் தடுத்துவைத்து விசாரிக்கப்பட்டார். எனினும் நீதிவான் நீதிமன்றத்தின் முன்னிலையில் வைக்கப்பட்டுள்ள உண்மைகளின்படி பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கக்கூடிய அளவுக்கு எந்தக் குற்றங்களும் வெளிப்படுத்தப்படவில்லை.

உண்மை இவ்வாறிருக்கும்போது சில அரசியல் அதிகாரிகளும் மற்றும் சில உயர் பொலிஸ் அதிகாரிகளும் வசந்த முதலிகேயின் தனி மனித உரிமையை மீறும் வகையில் அவரை பூஸா தடுப்பு முகாமுக்கு மாற்றுவதற்கு முயற்சித்துள்ளனர் என அறியமுடிகின்றது. பூஸா தடுப்பு முகாமானது போதைப்பொருள் கடத்தல் மற்றும் பாதாள உலகச் செயற்பாடுகள் போன்ற பெரும் குற்றங்களுடன் தொடர்புடையவர்களைத் தடுத்துவைக்கும் சிறைச்சாலையாகும். இவ்வாறு மாற்றுவதன் மூலம் வசந்த முதலிகேயின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்துவதே சம்பந்தப்பட்ட தரப்பினரின் நோக்கம் எனத் தெரியவந்துள்ளது.

நீதிமன்ற உத்தரவுக்கமைய வசந்த முதலிகே சிறைச்சாலையின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். அவர் எங்கு தடுத்துவைக்கப்படவேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் படைத்த அதிகாரிகள் என்ற வகையில் நீங்கள் இவ்வாறான அநீதியான தீர்மானங்களுக்கு இடமளிக்கக்கூடாது. வசந்த முதலிகேயின் உயிரைப் பாதுகாக்கும் முகமாக கொழும்பு சிறைச்சாலையிலேயே உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (ம-14)

# நாய்க்கு பாலியல் துன்புறுத்தல் உடன் விசாரணை மேற்கொள்க

## இலங்கை அரசாங்கத்துக்கு பீட்டா அமைப்பு வலியுறுத்து

ஜனாதிபதியின் ஆலோசகர் ஒருவர் நாயை பாலியல் ரீதியில் துன்புறுத்தியமை குறித்த குற்றச்சாட்டுகள் குறித்து இலங்கை அரசாங்கம் விசாரணைகளை மேற்கொள்ளவேண்டுமென சர்வதேச விலங்குகள் உரிமை அமைப்பான பீட்டா வலியுறுத்தியுள்ளது.

பீட்டாவின் அதிகாரிகளில் ஒருவரான டப்னா நச்சிவினோமிச் இதுதொடர்பில் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதியின் ஆலோசகருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் குறித்து இலங்கை அரசாங்கம் முழுமையான விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம். அவ்வாறான விடயம் இடம்பெற்றது உண்மை என்றால் இலங்கையின் சட்டங்களின்கீழ் தண்டனை வழங்கவேண்டும். விலங்குகளைப் பாலியல் ரீதியில் துன்புறுத்துபவர்கள் பின்னர் மனிதர்களுக்கு எதிராக அவ்வாறான செயல்களில் ஈடுபடுவது அநேகமாக இடம்பெற்றுள்ளது - என்றார்.

ஜனாதிபதியின் ஆலோசகர் நாயைத் துன்புறுத்தும் வீடியோ சமூகவலைத்தளங்களில் வெளியாகியது. இந்த வீடியோ வெளியான சில மணிநேரத்தில் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான ஜனாதிபதியின் ஆலோசகர் தனிப்பட்ட காரணங்களுக்காக தனது பதவியை இராஜினாமா செய்வதாகத் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)


## பெயர் மாற்றம்

இல.22 சக்திபுரம் உருத்திரபுரம் வடக்கு கிளிநொச்சியில் வதியும் **ஐயாத்துரை விமலாதேவி** ஆகிய நான் இன்றுமுதல் எனது பெயரை **ஐயாத்துரை விமலேஸ்வரி** என மாற்றம் செய்வதோடு, இனிவரும் சகல ஆவணங்களிலும் **ஐயாத்துரை விமலேஸ்வரி** என்றே கையெப்பமிட்டு பயன்படுத்துவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு உறுதிப்படுத்துகின்றேன்.

(cs 47402) (2.6) **ஐயாத்துரை விமலேஸ்வரி**

## 18ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகளில்......

**வேலாயுதம்பிள்ளை மல்லிகாமலர்**
மருதமண்ணில் முத்தாக
08.06.1966

**வேலாயுதம்பிள்ளை இளவரசி**
மருதமண்ணில் முத்தாக
29.03.1995

அழிப் பேரலையில்
நெய்தலில் வித்தாக
26.12.2004



மழை மேகம் எழுந்து தாலாட்டும்
கல்லறை மீது பூமழை சொரியும்
உணர்வுகள் கவலையை மீட்கும்
உறவுகள் கூடி ஆறுதல் தேடும்.

(cs22319)(2.6)

மருதங்கேணி வடக்கு,
மருதங்கேணி.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 06.06.1941 மறைவு 13.12.2022

### நடராசா ஆனந்தராசா (வேவி)

(ஓய்வுநிலை தபால் அதிபர்)

எமது ஆலய பரிபாலன சபை உறுப்பினராக இருந்து ஆலய வளர்ச்சிக்கு பங்களித்த புனிதர். அன்னாரின் ஆத்மா சாந்திபெற கண்ணலிங்கேஸ்வரப் பெருமானையும் கண்ணகியம்மனையும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

கண்ணலிங்கேஸ்வரர் ஆலயம்,
கண்ணகியம்மன் ஆலயம்,
வட்டுக்கோட்டை.

ஆலய பரிபாலன சபையினரும்
தொண்டர் சபையினரும்

(CR 38863)(3/6)

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 01.12.1921 மறைவு 22.12.2022

### Dr. வைத்திலிங்கம் சபாரத்தினம்

(ஓய்வுநிலை வைத்தியர் – அவுஸ்ரேலியா)

எமது ஆலய வளர்ச்சிக்காக ஆலய பரிபாலன சபைத் தலைவராக இருந்து அரும்பெரும் பங்காற்றிய புனிதர். அன்னாரின் ஆத்மா சாந்தி பெற கண்ணலிங்கேஸ்வரப் பெருமானையும் கண்ணகியம்மனையும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

கண்ணலிங்கேஸ்வரர் ஆலயம்,
கண்ணகியம்மன் ஆலயம்,
வட்டுக்கோட்டை.

ஆலய பரிபாலன சபையினரும்
தொண்டர் சபையினரும்

(CR 38864)(3/6)

## ஆண்டுகள் 18 இலும் அழியாச் செல்வங்களாய்!

### பேரலையில் பெருங்காவியமான பெருமகன்கள்




ஆண்டுகள் 18 ஆகினும் அழியா நினைவுகளாய் ...
என்றும் உம் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### திருமதி இராஜசிங்கம் ருக்மணி

40/1, புதுவீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜசிங்கம் ருக்மணி நேற்று (25.12.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னையா வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராஜசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், மஞ்சுளா (ஓய்வுபெற்ற ஆசிரியை), தில்லைவாசன் (ஆயுள்வேத வைத்தியர், ஜனாதிபதி சாரணர்), சர்மிளா (கனடா), ஊர்மிளா (கனடா), யசோதா (முன்னாள் - உதயன் பத்திரிகை பணியாளர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவராசா (ஓய்வுபெற்ற அதிபர்), நந்தினி, நந்தகுமார் (கனடா), இராமநாதர் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற பாலாம்பிகாவதி மற்றும் இராஜசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இராசேந்திரம், யோகம்மா, நாகரத்தினம் மற்றும் புஸ்பராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஹம்ஸா தாரணி, பிரணவன், உதிசன், தானுசன், மதுஷன், கௌசல்யா, யாழினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2022) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

40/1, புதுவீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

தகவல்
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 24 • 03 • 1939

இறப்பு 06 • 01 • 2022

நல்லூர், தெல்லிப்பழையை வதிவிடங்களாக கொண்ட

## கதிரவேலு ஆறுமுகம்


(பிரபல காங்கேசன்துறை சீமெந்து விற்பனை முவகவர்)

குடும்பத்தின் ஒளி விளக்காய்
குலத்தே மிளிர்ந்தீர்கள் அன்பு அப்பாவே!
நீங்கள் எம்மைப் பிரிந்து ஆண்டு ஒன்று ஆகிவிட்டது
ஆயிரம் ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அப்பா என்று அழைக்க நீங்கள் இப்பூவுலகில் இல்லை
ஓராண்டு போனாலும் மௌனமாக எமக்குள்ளே
எம்மனசு அழுவதை நீங்கள் உணர்வீர்கள்
காலங்கள் கடந்து சென்றாலும் ஒவ்வொரு நொடிகளிலும்
இதயத்துடிப்பை போல் எங்கள் அருகில் நீங்கள் இருப்பதை
நாங்கள் உணருகின்றோம் அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்
077 925 4914

147 C, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்



பிறப்பு 29 - 03 - 1946

இறப்பு 22 - 12 - 2022

## திரு. குமாரசாமி சதானந்தன்

(உரிமையாளர், சதாபேக்கரி – உரும்பிராய்)

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், உரும்பிராயை வதிவிடமாகவும் கொண்ட திரு. குமாரசாமி சதானந்தன் கடந்த (22.12.2022) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் மகேஸ்வரன், மல்லிகா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2022) திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் (இராசமணி இல்லம் கருணாகரப்பிள்ளையார் பின் வீதி) நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

077 243 1953

தகவல்:
குடும்பத்தினர்

(CS 48295) (3/6)

# மரண அறிவித்தல்



BORN 12 . 12 . 1961

DEATH 23 . 11 . 2022

## அருளப்பு டொனாஸ் (சந்திரன்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட அருளப்பு டொனாஸ் (சந்திரன்) அவர்கள் கடந்த (23.11.2022) அன்று பிரான்சில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளப்பு - கிளாறம்மா தம்பதியரின் அன்பு மகனும், பெனடிற், டொமினிக், மெற்றில்டா, மேரிஜோசேப்பின், டொனால்ட் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் (64/3, புகையிரத மேற்கு ஒழுங்கை) சமய ஆராதனை இடம்பெற்று பின் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
077 724 5207, 077 828 5375 (cs.22454) (2.6)

தகவல்: குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



தோற்றம் 31 - 03 - 1943

மறைவு 24 - 12 - 2022

## திருமதி பொன்னுத்துரை சறோஜினி

வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னுத்துரை சறோஜினி அவர்கள் கடந்த (24.12.2022) சனிக்கிழமையன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம் இராசமணி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான சீனிவாசகம் – செல்வலட்சுமி தம்பதி யினரின் மருமகளும், காலஞ்சென்ற பொன்னுத்துரை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற முத்துக்குமாரசாமி (ஓய்வுபெற்ற உதவி தொழில் ஆணையாளர்) மற்றும் கமலாதேவி, தெட்சணாமூர்த்தி (இலண்டன்) ஆகியோரின் சகோதரியும், பவானி (ஜேர்மனி), மதியூகன் (JDMBA), மதிவதனன், தயாளினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், வலிதென்மேற்கு பிரதேச சபை மானிப்பாய்), சாந்தினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற கருணாகரநாதன் (ஜேர்மனி) மற்றும் இரத்தினேஸ்வரி (பிரதேச செயலகம், உடுவில்), நவாசன், பிரியதர்சினி (ஆசிரியர், யாழ். சங்குவேலி அ.த.க பாட சாலை), குகசீலன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், குணரட்ணம், குணபாலசிங்கம், குணலிங்கம், தவமணி மற்றும் சத்தியதேவி (இலண்டன்) ஆகியோரின் மைத்துனியும், கஜேந்திரன், அனுஜன், லக்ஷ்சன், பிரணவி, அஷ்விகன், லேனுஷா, கிருஷா, யுஜித் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2022) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

வன்னியசிங்கம் வீதி,
தாவடி வடக்கு,
கொக்குவில்.

(CS 22453)(3/6)


தகவல் :
குடும்பத்தினர்
077 252 2608,
077 458 6413

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் வீராட் விஸ்வப் ப்ரம்மனே நமஹ

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

## அமரர்
# இராசையா தெய்வேந்திரன்
## (உரிமையாளர், இந்திரன் ஜ்வல்லர்ஸ்)



**திதி : 26.12.2022**

**தோற்றம்**
**02.09.1950**

**மறைவு**
**06.01.2022**

நாட்கள் நகர்ந்து ஆண்டொன்று
- ஆனது அப்பா
நாட்காட்டியை பார்த்தபடி உங்களுடன்
- கழித்த நாளிது
கடிகார நொடி நகர்தலை பார்த்தபடி
உங்களருகில் அமர்ந்த நிமிடமிது
- வென்று
ஆனந்தமாய் களித்த கணங்களை
- எண்ணியே
எம் வாழ்நாள் நகர்தலை
நெஞ்சில் வலியுடனும்
நீங்காத நினைவுகளுடனும்

(CR 38848) (3/6)

## நினைவுகளுடன்
# குடும்பத்தினர்

மீனாட்சி அம்மன் கோவில் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி கமலாம்பிகை திருஞானசம்பந்தர்



தோற்றம் -03.10.1950
மறைவு - 25.12.2022

புங்குடுதீவை பிறப்பிடமாகவும் வேலணையை வசிப்பிடமாகவும் தற்போது 193/01. பிறவுண் வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை திருஞானசம்பந்தர் நேற்று (25.12.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் திருஞானசம்பந்தரின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நடராசா மற்றும் பூமணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு.திருமதி ஆறுமுகம் தம்பதியரின் மருமகளும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**193/01, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்: பிள்ளைகள்**
**0767086316**

# மரண அறிவித்தல்

## திருமதி செல்வராணி விக்கினேஸ்வரன்

அன்னைமடியில்
09.10.1962

இறைவன் மடியில்
25.12.2022



யாழ்ப்பாணம் கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராணி விக்கினேஸ்வரன் நேற்று (25.12.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
அன்னார் இராசரத்தினம் விக்கினேஸ்வரன் (கஜன் பிறிண்டேர்ஸ். உரிமையாளர். கோண்டாவில்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் - கண்மணி தம்பதிகளின் ஏக புத்திரியும் காலஞ்சென்ற இராசரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்- இணுவில் இந்துக் கல்லூரி) மற்றும் இரத்தினமணி (ஓய்வுபெற்ற ஆசிரியர்- யா/ தாவடி இந்து மகா வித்தியாலயம் ) அவர்களின் மருமகளும் துவாரகா (ஆசிரியை- யா/ காரை நகர் இந்துக் கல்லூரி) . கஜகரன் (சிவில் எஞ்சினியர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் பார்த்தீபன் (ஆசிரியர்- யா/டிறிபேர்க் கல்லூரி- சாவகச்சேரி) அவர்களின் மாமியாரும் பிரணவி, சங்கவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26.12.2022) திங்கட்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைகளுக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**முத்தட்டுமட லேன்,**
**கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## கைலாயநாதர் ஞானேஸ்வரி

தோற்றம்
23.03.1938

மறைவு
25.12.2022



கட்டுவனைப் பிறப்பிடமாகவும் தட்டாதெருவை வசிப்பிடமாகவும் கொண்ட கைலாயநாதர் ஞானேஸ்வரி நேற்று (25.12.2022) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற கைலாயநாதரின் அன்பு மனைவியும் இளமுருகன், நந்தினி. குகன், காலஞ்சென்ற சரவணபவான் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற ஆறுமுகம் -தெய்வானை அவர்களின் இளையமகளும் காலஞ்சென்ற மீனாட்சியின் அன்பு சகோதரியும் சிவஞானேஸ் வரி, சுமதி, மைக்கல் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆதவன், சர்ப்பனா, ஆதித்தன், அச்சுதன், அபிலாஸ், கிருஷாலனி, ரஞ்சித் ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2022) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் 531/3 கே.கே.எஸ் வீதி, தட்டாதெரு, யாழ்ப்பாணத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**தொடர்புகளுக்கு:**
**ஜீவா 0774393546**
**நந்தினி 0761375061**
**இளமுருகன் +33684291505**
**குகன் +33616061678**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# போர் நிறுத்தத்துக்கு ரஷ்யா தயார்

மொஸ்கோ, டிசெ. 26

உக்ரைனில் ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கை கடந்த 10 மாதங்களாகத் தொடர்ந்துவரும் நிலையில், அங்கு போர் நிறுத்தத்துக்குத் தயார் என்று அறிவித்துள்ளார் ரஷ்ய ஜனாதிபதி புடின். ஆனால், அமெரிக்காவின் சொற்படி நடக்கும் உக்ரைன் இதை விரும்பாது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.



உக்ரைன் ஜனாதிபதி ஷெலன்ஸ்கி அமெரிக்காவுக்குத் தற்போது சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். இதனால், உக்ரைன் ரஷ்ய மோதல் தொடர்பில் கூடுதல் கரிசனை செலுத்தப்பட்டு விடயம் கண்காணிக்கப்படுகின்றது. இந்த நிலையிலேயே, ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கை தொடர்பில் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார் புடின்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
உக்ரைன் மீதான இராணுவ நடவடிக்கையை முடிவுக்குக் கொண்டுவர விரும்புகிறேன். விரைவில் திருப்திகரமான வகையில் போருக்கு முடிவு காணப்படும். ஆனால், உக்ரைன் அதை விரும்பவில்லை. அமெரிக்காவுடன் கூட்டுச்சேர்ந்து ரஷ்யாவுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவதை உக்ரைன் தொடர்ந்து மேற்கொள்கின்றது. நாங்கள் சொல்லும் விடயங்களை உக்ரைன், அமெரிக்கா ஆகிய இரு நாடுகளும் காதுகொடுத்துக் கேட்கவில்லை. உக்ரைனைப் பயன்படுத்தி. ரஷ்யா மீது தாக்குதல் நடத்தி எங்களை பலவீனப்படுத்த அமெரிக்கா முயற்சி செய்கின்றது.
உக்ரைனை அமெரிக்கா போர்க்கருவியாகப் பயன்படுத்துகின்றது. எங்கள் நோக்கம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டும். அதற்காக பாடுபடுகிறோம், தொடர்ந்து பாடுபடுவோம். எல்லா பிரச்சினைக்கும் பேச்சு அல்லது ஏதாவது ஒரு வழியில் தீர்வு ஏற்படும். இதை உக்ரைன் புரிந்துகொள்ளவேண்டும். அப்படிப் புரிந்துகொண்டால் நன்றாக இருக்கும் - என்றார். (ம)

# மரண அறிவித்தல்



## பாலசுப்பிரமணியம் கனகம்மா

வேலணை வடக்கு சோளாவத்தையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் கனகம்மா நேற்று (25.12.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டு பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னம்பலம் தங்கம்மா தம்பதிகளின் அன்புமருமகளும் பாலசுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும் சுவீகரன், காலஞ்சென்ற வீஸ்ணுகரன், காலஞ்சென்ற மதியழகன், உதயழகன், பாரதா, காலஞ்சென்ற முகிலன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் திருமணிதேவி, கௌரியம்பிக்கை, றாகினி, சண்முகதாஸ், சிவாஜினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் நிஷாந்தன், துவிச்சன், விஸ்ணுகா, லுக்ஷன், விஸ்ணுப்பிரியா, மெஷாக் சாத்விகா, தெய்வீகன் வேணுப்பிரியா, திவ்வியா, ரஜீகரன், கஜனிகா, கபிஷாந், கபிநாத், லதாங்கி, சரணியா, ஜினோசன், டிலக்ஷன், சுவீஷன், தேனுஸ்ஷா, தஷானா, ரிஷானா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தாரகி, தருணிகன், அகரவ், அக்ஷேவ் ஆகியோரின் அன்புப் பூட்டியும் பார்வதிப்பிள்ளை, இரத்தினாம்பாள் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான நடராசா, சோமசுந்தரம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2022) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் கிரியைகள் இடம்பெற்று நண்பகல் 12 மணியளவில் உடல் தகனக் கிரியைகளுக்காக வீரம்புட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
**076 9276717**
**076 1078134**
**வேலணை வடக்கு. வேலணை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்த்...

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், 'உதயன்' பத்திரிகைக்கு நேற்றுத் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரனின் இல்லத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர் நேற்று முன்தினம் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியிருந்தனர். இது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவரின் நிலைப்பாட்டை கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

'அரசியல் தீர்வு, ஜனாதிபதியுடனான பேச்சு, உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக அறிந்தேன். இன்னும் பல விடயங்களை அவர்கள் கதைத்திருக்கக்கூடும். அரசியல் தீர்வு தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் ஒரு நிலைப்பாட்டிலேயே உள்ளன. அதேவேளை ஜனாதிபதியுடனான பேச்சும் தமிழர் அபிலாஷைகளை வெல்லக்கூடியதாக இருக்க வேண்டும் என்பதுதான் தமிழ்த் தேசியக் கட்சிகளின் நிலைப்பாடு.

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றாகப் போட்டியிடுவது அதிக நன்மை என்ற விடயமும் கலந்துரையாடப்பட்டுள்ளது, இது பேச்சளவில் உள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிகள் இது தொடர்பில் கலந்துரையாடி இறுதி முடிவு எடுப்பார்கள். ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் கலந்துரையாடி இறுதி முடிவு எடுப்போம். இதனை விட மேலதிகமான கருத்துக்களை வெளியிட்டு குழப்ப விரும்பவில்லை' - என்றார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா, தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன், புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன், ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.சிறீகாந்தா மற்றும் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சந்திப்பில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5-22)

## வெள்ளத்தில்...

வாகனங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. கண்டி ரயில் நிலையத்தினுள்ளும் வெள்ளம் புகுந்ததால் மலையகத்துக்கான ரயில் சேவைகளும் நிறுத்தப்பட்டன.

**மண் சரிவு**

கண்டி, அக்குறணை - துணுவில பிரதேசத்தில் வீடொன்றின் மீது நேற்று மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு சகோதரர்கள் உயிரிழந்துள்ளனர். 18 மற்றும் 19 வயதுடைய இருவரே உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களின் தாய், தந்தை மற்றும் மற்றுமொரு சகோதரர் என ஐந்து பேர் வீட்டில் இருந்துள்ளனர். சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் மற்றுமொரு சகோதரனும் படுகாயமடைந்து கண்டிபோதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். தெய்வாதீனமாக தாய் மற்றும் தந்தைக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படவில்லை.

இதேவேளை- கண்டி, குருநாகல், மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த சீரற்ற காலநிலை காரணமாக கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் வசிக்கும் 342 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 500 பேர் வரையில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர்முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (அ-ஒ-5)

## ஆழிப்பேரலை...

உள்ளோம். ஒருபுறம், தொடர்ந்தும் கடல்சார் வளங்களைச் சூறையாடிக் கொண்டு, இன்னொருபுறம் கடற்கோளில் பலியானவர்களுக்கு அஞ்சலி நிகழ்ச்சிகளையும் செய்து வருகிறோம். கடல்சார் வளங்களைச் சூறையாடுவதை உடனடியாக நிறுத்துவதே கடற்கோளில் பலியானவர்களுக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலியாக அமையும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் இடித்துரைத்துள்ளார்.

இலங்கையை 2004ஆம் ஆண்டு டிசெம்பர் 26ஆம் திகதி கடற்கோள் தாக்கி முப்பத்தையாயிரத்துக்கும் அதிகமானோரைப் பலியெடுத்திருந்தது. அதன் 18ஆவது நினைவை முன்னிட்டு பொ. ஐங்கரநேசன் விடுத்திருக்கும் ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு உரைத்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் அவர் தெரிவிக்கையில்;

எல்லா வளங்களையும் போன்றே கடல்சார் வளங்களும் மனிதன் உட்பட உலகின் அனைத்து உயிரினங்களுக்கும் அவற்றின் வருங்காலத் தலைமுறைகளுக்குமானவை. இங்கு உண்ணுவதும் உணவாவதும், எடுப்பதும் கொடுப்பதும் இயற்கையின் நியதி. இயற்கைச் சூழலின் சமநிலை விதியும் இதுவே. ஆனால், பேராசை மிக்க மனிதர்கள் கடல் வளங்கள் அனைத்தும் தமக்கு மட்டுமே உரித்தானதென வளங்களைச் சூறையாடுவதற்குத் தலைப்பட்டுள்ளார்கள். இதனால், இயற்கைச் சமநிலை குழம்பி இயற்கைச் சீற்றங்கள் பேரனர்த்தங்களாக வெளிப்பட்டு வருகின்றன.

இழுவைப் படகுகளின் மூலம் கடலடி வளங்களை வாரிச்சுருட்டி வருகின்றோம். கடலகப் பவளப் பாறைகள் துவம்சம் செய்யப்படுகின்றன. கடலட்டைப் பண்ணைகளையும் இறால் பண்ணைகளையும் இயற்கைக்கு விரோதமான ஒற்றையினக் கடல் வேளாண்மையாக விரிவாக்கி வருகிறோம். கரையோரக் கண்டற்காடுகள் தீமூட்டி அழிக்கப்படுகின்றன. மணல் மலைகள் அனுதினமும் கொள்ளை போகின்றன. இப்படி, வருங்காலத் தலைமுறைகளுக்கும் சேர்த்து வாழ்வளிக்க வேண்டிய கடல்சார்ந்த வளங்களை இலாப வேட்கைக்காகத் தொடர்ந்தும் சீரழித்து வருகிறோம். அளவுக்கு மிஞ்சிய மீன்பிடியால் கடலில் மீனினங்கள் அருகி வருகின்றன. ஒற்றையினக் கடற் பண்ணைகளால் கடலின் உயிர்ப்பல்வகைமை கேள்விக்குறியாகி வருகிறது. கடலில் நாம் சேர்த்து வரும் இரசாயனங்களால் கரையோரக் கடல் இறக்கத் தொடங்கியுள்ளது. விரோதமான செயற்பாடுகளைப் பொறுத்துக் கொள்ளாத கடல் இன்னுமொருதடவை பொங்கிச் சீறமாட்டாது என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை. கடற்கோளின் படிப்பினையை ஏற்று கடற்சூழற் தொகுதிக்கு விரோதமான செயற்பாடுகளை நிறுத்துவோமெனக் கடற்கோள் நினைவுநாளில் உறுதியேற்போம் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஒ-5)

## பக்கதர்களின்...

இரண்டு ரி - 56 ரக துப்பாக்கித் தோட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக மாதம்பை பொலிஸார் தெரிவித்தனர். மாதம்பை புனித செபஸ்தியார் தேவாலயம், மெதகம, இரத்தினகிரிய கோபியவத்த, இரட்டைக்குளம், ஹரேந்திரகம, தரான ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள தேவாலயங்களிலும் நத்தார் ஆராதனைகள் இடம்பெற்றன.

இந்த தேவாலயங்களுக்கு பக்தர்கள் வழங்கிய காணிக்கைகள் அனைத்தும் மாதம்பை புனித செபஸ்தியார் தேவாலயத்துக்கு கொண்டுவரப்பட்டுபுனிதசெபஸ்தியார் தேவாலயத்துக்கு வழங்கப்பட்ட காணிக்கைகளுடன் சேகரிக்கப்பட்டு ஊழியர் ஒருவரால் சரிபார்க்கப்பட்டதாக மாதம்பை பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்போது, ஒரு வெள்ளை பைக்குள் சிறிய பிளாஸ்டிக் பெட்டியை கண்டுபிடித்ததாகவும், அதை திறந்து பார்த்தபோது, அதனுள் தோட்டாக்கள் காணப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ஒ-இ)

## மீனவர்கள்...

ஒரு படகில் மீன்பிடிக்கச் சென்ற 19 வயது மற்றும் 23 வயது இளைஞர்களே காணாமற்போயுள்ளனர். (அ-ஒ-இ)

## புலிகளுக்கு...

தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் மறுமலர்ச்சியைத் தூண்டுவதற்கு பாகிஸ்தானின் புலனாய்வுச் சேவை முயற்சித்து வருவதாக இலங்கையின் ஊடகமொன்றினை மேற்கோள் காட்டி குறித்த இந்திய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்காக, சட்டவிரோத போதைப்பொருள் மற்றும் ஆயுதக் கடத்தல்களை மேற்கொண்டதாக கூறப்படும் ஒன்பது இலங்கையர்களை இந்தியாவின் தேசியப் புலனாய்வு முகவரகம் இந்த வாரத் தொடக்கத்தில் கைது செய்திருந்தது. அதனையடுத்தே, குறித்த ஊடகம் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானை தளமாகக் கொண்ட போதைப்பொருள் மற்றும் ஆயுதக் கடத்தல்காரரான ஹாஜி சலீமுடன் இணைந்து இலங்கையர்களான குணசேகரன் மற்றும் புஷ்பராஜா ஆகியோரால் கட்டுப்படுத்தப்படும் இலங்கை போதைப்பொருள் மாபியாவின் நடவடிக்கைகள் பாகிஸ்தான் புலனாய்வுச் சேவையுடன் தொடர்புடையது என இந்தியாவின் தேசிய புலனாய்வு முகவரகம் தெரிவிக்கிறது.

இலங்கையில் உள்ள பாகிஸ்தானியத் தூதரகம் தமிழ்நாட்டில் சில செயற்பாட்டாளர்களை கண்காணித்து வந்தது. அத்துடன் அவர்கள் தாக்குதலுக்காக பல இலக்குகளை உளவு பார்த்தனர் என்பதையும் 2014ஆம் ஆண்டு இந்திய உளவுச் சேவை கண்டுபிடித்தது. அந்த அமைப்பை தேசிய புலனாய்வு முகவரகம் வேரோடு முறியடித்த போதிலும் தற்போது தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் விடுதலைப் புலிகள் இயக்கத்தை புதுப்பித்து, பிராந்தியத்தில் அமைதி மற்றும் பாதுகாப்பை சீர்குலைக்க பாகிஸ்தான் புலனாய்வு சேவை முயற்சிக்கிறது என்று இலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளதாக, குறித்த இந்திய ஊடகம் தெரிவித்துள்ளது. (அ-ஒ-இ)

## யாழ்...

மாவட்டச் செயலர்களுக்கான இடமாற்றத்துக்கு அமைவாக அவர் மாற்றலாகிச் செல்லவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இராஜாங்க அமைச்சு ஒன்றின் செயலாளராக அவர் இடமாற்றம்பெற்றுச் செல்லக் கூடும் எனத் தெரியவருகின்றது.

2020ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்டச் செயலராகக் கடமையாற்றிய நா. வேதநாயகன், அரசியல் ரீதியான பழிவாங்கலால் இடமாற்றத்துக்குள்ளாக்கப்பட்ட நிலையில், அவர் ஓய்வு பெற்றிருந்தார். இந்த நிலையில் மாவட்டச் செயலராக க.மகேசன் 2020ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி கடமைகளைப் பொறுப்பேற்று, கொரோனாப் பெருந்தொற்றுக்காலம், பொருளாதார நெருக்கடி நிலை போன்ற இக்கட்டான சூழ்நிலைகளில் மிகச்சிறப்பான பணியை யாழ்.மாவட்டத்துக்கு ஆற்றியிருந்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு புதிய செயலராக, தற்போது கிளிநொச்சி மாவட்ட செயலராகவுள்ள திருமதி றூபவதி கேதீஸ்வரன் நியமிக்கப்படவுள்ளார் என்றும் அறியமுடிகின்றது. (அ-ஒ-5)

## யாழ்ப்பாணத்தில்...

தெரிவிக்கப்படுகின்றது. பாதுகாப்புத் தரப்பினரே இவ்வாறான செயற்பாட்டுக்கு முன்னோடியாக இருப்பதாகவும் குற்றஞ்சுமத்தப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் உயிர்கொல்லி போதை மாத்திரைகளுடன் பலர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் கைவசம் வைத்திருந்த மாத்திரைகள், மருத்துவத் தேவைக்கு வலி நிவாரணியாகப் பயன்படுத்தப்பட்டு வந்தன. இந்த நிலையில் அவற்றை உயிர்கொல்லி போதை மாத்திரையாக பலர் பயன்படுத்தினர்.

கடந்த நவம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அபாயகர ஔடதங்கள் சட்டத்தின் ஊடாக அத்தகைய வலி நிவாரணிகள் ஆபத்தான உயிர்கொல்லி போதைப் பொருள்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றை மருந்தகங்களில் விற்பனை செய்யவும் முடியாது.

இந்த நிலையில் அவற்றுக்குப் பதிலாக மனநோய்க்கு நிவாரணியாகப் பயன்படுத்தப்படும் மருந்தை, போதைப் பொருளாக சிலர் உபயோகித்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

படையினரே ஆரம்பத்தில் இதனை மருந்தகங்களிலிருந்து அதிகளவு கொள்வனவு செய்துள்ளமையும் தெரியவந்துள்ளது.

தற்போது யாழ்பாணத்தில் பல இளைஞர்கள் இந்த மருந்தை உயிர்கொல்லி போதைப் பொருளாகப் பயன்படுத்துகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஒ-5)

## வடக்கில்...

பதிவாகக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. வங்காள விரிகுடாவிலிருந்து திருகோணமலை நிலப்பரப்பில் தரையேறி நேற்று மத்திய மலைநாட்டில் நிலைகொண்டிருக்கும் தாழ்வு நிலையானது இன்று காலை மேல்மாகாணத்தை ஊடறுத்து மன்னார் வளைகுடா ஊடாக அரபிக்கடல் நோக்கி பயணிக்கும் சாத்தியம் காணப்படுகிறது.

இதன் காரணமாக இன்று மேல் மற்றும் தென் மாகாணங்களில் அதிக மழைவீழ்ச்சிக்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

மேலும் இது கடலில் இறங்கியதும் சற்று வலுப்பெறும் என்பதால் வெப்பக்காற்றை வடக்கு மாகாணம் ஊடாக ஈர்க்கும். இதன் காரணமாக ஒட்டுமொத்த வடக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களில் மதிய வேளையில் குறிப்பிடத்தக்க மழைவீழ்ச்சி பதிவாகலாம்.

தொடர்ந்து தாழ்வு நிலை கடலில் மேற்கு நோக்கி வேகமாக பயணிக்கும்போது, இன்று இரவுடன் இந்த மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை முடிவுக்கு வருவதோடு, நாடுமுழுவதும் சீரானவானிலை காணப்படும். (அ-ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியாவில்

# வெட்டுக்காயங்களுடன் இருவர் மருத்துவமனையில்

வவுனியா, டிசெ. 26

வவுனியா, சிதம்பரபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோமரசங்குளம் பகுதியில் வெட்டுக்காயங்களுடன் உயிருக்குப் போராடி கொண்டிருந்த இருவர் மருத்துவமனையில் நேற்றுச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கோமரசன்குளம் பகுதியில் வெட்டுக் காயங்களுடன் உயிருக்கு போராடிய நிலையில் வீதியில் ஒருவர் காணப்பட்டுள்ளார். இதனை அவ்வீதியால் சென்றுகொண்டிருந்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அவதானித்து, உடனடியாக அம்புலன்ஸை வரவழைத்து வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்த்துள்ளார். மேலும் ஒருவர் அந்தப் பகுதியில் வெட்டுக்காயங்களுக்குள்ளாகி காணப்பட்ட நிலையில் அப் பகுதி மக்களால் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

போத்தல்களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தாலேயே இருவரும் காயங்களுக்குள்ளாகியுள்ளனரென பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. 50 மற்றும் 53 வயதுடைய இருவரே இவ்வாறு காயங்களுடன் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (அ-ஓ-110)

கணவனை...

மூவரும் வீட்டில் இரவுவேளை உறங்கிக்கொண்டிருந்தபோது, மூவர் வீட்டுக்குள் திடீரென புகுந்துள்ளனர். ஒருவர் வீட்டின் வாசலில் காவலுக்கு நிற்க, மற்றையவர் கணவனின் கழுத்தில் கத்தியை வைத்துள்ளார். இன்னொருவர் மனைவியை வன்புணர்வதற்கு முயற்சித்துள்ளார். இருப்பினும் அவர்கள் எழுப்பிய சத்தத்தால் சந்தேகநபர்கள் தப்பியோடியுள்ளனர்.

சந்தேகநபர்களை அடையாளப்படுத்தியதைத் தொடர்ந்து பொலிஸார் அவர்களைக் கைது செய்துள்ளனர். இவர்கள் மீது இதேபோன்ற முறைப்பாடுகள் கடந்த காலங்களிலும் மேற்கொள்ளப்பட்டிருந்ததாகப் பொலிஸார் கூறுகின்றனர். (அ-ஓ-5)

பலாலி...

யாக இடம்பெற்று வரும் நிலையில், எதிர்வரும் ஜனவரி 7ஆம் திகதி வரையில் ஆசனங்கள் முற்பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

2019 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் விமானசேவை ஆரம்பிக்கப்பட்டு 2020ஆம் ஆண்டு மார்ச் மாதத்துடன் சேவை நிறுத்தப்பட்டது.

மீண்டும் கடந்த 12 ஆம் திகதி சேவை ஆரம்பிக்கப்பட்டது. பயணி ஒருவர் முன்னர் 15 கிலோ எடையைக் கொண்டு செல்ல அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் இப்போது அது 25 கிலோவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. திங்கள், செவ்வாய், வியாழன், சனி ஆகிய 4 நாள்களிலும் தினமும் ஒரு சேவை இடம்பெற்று வருகின்றது.

விமான நிலையம் மீளத் திறக்கப்பட்டதிலிருந்து இரு வாரங்களாக 8 நாள்களும் சேவை இடம்பெற்றுள்ளதுடன், போதுமானளவு பயணிகளுடனேயே விமானங்கள் பயணித்ததாகத் தெரிவிக்கப்படு கின்றது.

இறுதியாக சென்னையிலிருந்து யாழ்ப்பாணம் வந்த விமானத்தில் 60 பயணிகள் பயணித்ததுடன், அதே விமானத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து 48 பயணிகள் சென்னைக்குச் சென்றுள்ளனர். (அ-ஓ-5-26)


**VISA Application now in process - 2023**

சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

1. Student Visa, Work Visa (Minimum qualification A/L)
2. Tourist Visa – All countries
3. Visa related letters to immigration
4. Scheduled appointments
5. Online application filling
6. Translation (Tamil to English)
7. Online Police Clearance




பதிய விரும்புவோர் நேரடியாக அலுவலகத்திற்கு சமூகமளிக்கவும்.

பணியாளர் தேவை: A/L படித்த மற்றும் கணணி அறிவுடையோர் விரும்பத்தக்கது.

Lanka Cargo Worldwide Express (DHL Parcel Service)

315, Kasthuriyar Road, Jaffna. T.P: 0770385584. Email :naltcjaffna@gmail.com



**ENGLISH CLASSES**

Gr 1 to O/L
Grammar and Syllabus
வீடு வந்து கற்பிக்கப்படும்
(Personal classes only)

Tp no - 077 33 14 608



## வேலைவாய்ப்பு



யாழில் இயங்கிவரும் எமது நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடத்திற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**லிகிதர் (Clerk) தேவை**

ஆர்வமுள்ளவர்கள் நாளை (26.12.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00- பிற்பகல் 02.00 மணிவரை நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு சமுகம் தரவும்.

**உதயன் பணிமனை**

இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

**நிலப்பரப்பு**

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன். 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- பெரிய நாகதம்பிரான் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- A-9 பிரதான வீதியில் இருந்து 700 M தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 72 உள்ளன.
- குடிதண்ணீர் கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது.
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன. (பைப் லைனிங்)
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**ரகர் தேவையில்லை.**

ர்வையிடும் நேரம் :

லை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

தொடர்பு:- **ஜெயம்**

**077 98 65 457**
**077 81 47 389**


ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



**திருமதி திலகவதி செல்வராசா (ராசா)**

சுழிபுரம் பத்திரகாளி கோவிலடியைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி பத்திர காளி கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திலகவதி செல்வராசா (ராசா) அவர்கள் கடந்த 24.12.2022 இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமசாமி - கோகிலம் ஆகியோரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான சதாசிவம் - செல்லம்மா ஆகியோரின் மருமகளும், செல்வராசா அவர்களின் அன்பு துணைவியாரும், குமுதினி, பிரபாகரன், கருணாகரன், கபில்ராஜ் ஆகியோரின் அன்புத் தாயாரும், பாஸ்கரன், ஜெயலட்சுமி, நகுலா, சாங்கீதா ஆகியோரின் அன்பு மாமியாரும், திலக்சன், திஹானா, இந்துஜா, தான்ஜா, தர்வின் பிரணவி, பிரனுகன், ஆருண்யன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற நவமணி மற்றும் விக்னேஸ்வரி, பாலமுரளி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சிவனடியார், சின்னையா, சிவகுருநாதன் மற்றும் கந்தசாமி காலஞ்சென்ற விஜயகுமார் மற்றும் உமாவதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.12.2022) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடிலேன்,
திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.12.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.